ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

நித்தியகர்மங்களைச் செய்துவிட்டு தியான யோகத்திலிருக்கும் குருவினிடம்சென்று, தியானம் கலையும்வரை காத்திருந்து, தியானம் கலைந்து எழுந்தஸமயத்தில், சிஷ்யன் குருவைப்பணிந்து பக்தியுடன் கேட்கிறான்: ஹே! குருநாதா !! பிரமாணநூல்கள்யாவும் ஈசுவரனொருவரிருப்பதாகக் கூறுகிறதே, அது உண்மைதானா?

குரு:-குழந்தாய்! என்ன ஸந்தேஹம், உண்மைதானது.

சிஷ்யன்:-அப்படியானால் அவரதுஆஞ்ஞையைமீறி நடப்பவர்களை உடனே ஏன் சிக்ஷிக்கவில்லை? அவர் ஸ்வதந்திர ரென்றும், ஸர்வசக்தரென்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறதே.

குரு:-வாஸ்தவம்தான், அதிகஉத்கடமாகச்செய்யப்படும் கொடிய நடத்தைகளுக்கு உடனே பயனை அவர் அளித்துவிடுகிறார். ஆனாலந்தவிபரத்தை மூடர்கள் அப்படித்தெரிந்து கொள்ளுவதில்லை. தனதுபாபத்திற்கேற்றபடி நேர்ந்ததை வேறு காரணத்தால் நேர்ந்ததாகக் கருதுகின்றார்கள். அதனால் ஈசுவரன் உடனே சிக்ஷிக்கவில்லை யென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள்; அன்றியும் சில பாபங்களுக்குள்ள பயன் மானிடப்பிறவியில் கொடுக்க முடியாததாயிருக்கும். அதாவது, நாய், பன்றி, கழுதை முதலிய சரீரங்களையெடுத்து அனுபவிக்கவேண்டிய பயனை மானிட சரீரத்தில் கொடுக்கமுடியாதல்லவா? அதனால் அந்தப்பிறவியிலேயே பயன் அனுபவிக்கப்படாததுபற்றி பாமரர்கள் ஈசுவரனில்லை யென்றும் இதற்கு சிக்ஷை எவராலும் செய்யப்படப் போகிறதில்லையென்றும் நினைக்கிறார்கள். சற்று ஆலோசித்துப்பார். சிலபேர்கள் ஒருகாரியத்தை மிக இரகஸ்யமாகச்செய்து, நன்மையையடைந்து விடலாம் என்று நினைத்துச் செய்தகாரியங்கள் பல பஹிரங்கமாய் போலீஸாரால் பிடிக்கப்பட்டு,அரசாங்கத்தாரால் விசாரணைசெய்து தண்டனை விதிக்கும்படி ஆய்விடுவதை நீ பத்திரிகைகளில் படித்ததில்லையா? அது ஈசுவரனாற்றான் அவ்விதம் செய்யப்பட்டதென்று ஆஸ்திகர்களது கொள்கை. நாஸ்திகர்கள் அங்ஙனமங்கீகரிக்காததற்காக, ஈசுவரனில்லாமற் போய்விடமாட்டார். திருடர்கள் தனது கொடியசெய்கையைக் காண்பவரில்லையென்று நினைத்துவிட்டதற்காக அரசாங்கத்தாரும் அவர்களது தூதர்களுமில்லாமற் போய்விடுவார்களா? இதுபோலவே ஈசுவரனையும் அவராக்ஞைப்படிநடக்கும் அதிகாரிதேவர்களையும் பிரமாணநூல்கள் கூறியபடி உண்மையென்றே உணர்ந்து, பிரஹ்லாதனைப்போல் சிரேயஸ்ஸையடைவாயாக. சுபம்!

ப—ர்.

ஆர்யதர்மம்.

சுக்ல-ஸு ஆனி-மீ உ அடை

# பிரஹ்லாதசரித்திரம்.

(357-வது பக்கத்தொடர்ச்சி.)

## அஸுரபாலகர்களுக்கு உபதேசம்.

ஓ! பாலகர்களே! இவ்வாறாக இரவு முதலியகாலங்களில் வீணாகச்சென்றதுபோக எஞ்சியுள்ள வாழ்நாட்கள் அளவிலடங்காக் காமத்தாலும், அதிக மோகத்தாலும், கிருகங்களிலீடுபட்டு மயங்கிக்கிடப்பதில் சென்றுவிடுகின்றன. கட்டிலடங்காத இந்திரியங்களை யடைந்த எவன்தான்மிக்க வலிதான ஸ்நேஹபாசங்களால் குடும்பத்திலீடுபட்ட தன்னை அதனின்று விடுவித்துக் கொள்ள சக்தியுள்ளவனாவான். முதலாவது பாருங்கள், அர்த்தத்தில் வைத்த ஆசையை எவன்தான் விடுவான். அதுபோலவே மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலிய விஷயாசை எவனால்தான் விடமுடியும்? குழந்தைகளின் மழலைச்சொல்லிலும், பெண்டீரின் இனிமைப்பேச்சிலும், பெண்களின் பிரார்த்தனை வாங்கியத்திலும், ஸஹோதர ஸஹோதரிகளின் வேண்டுகோளிலும், பெற்றோர்களின் மனக்கவலையிலும் மயங்கிக்கிடக்கும் எந்த மனிதன்தான் அவைகளைவிட்டு வெளியேறுவான்? பட்டுப்பூச்சி தன்னைத்தானாகவே கட்டிக்கொண்டு கஷ்டப்படுவதுபோல் எவனும் கஷ்டத்தைத்தானடைகிறான். குடும்பத்தைப் போஷிப்பதற்காக ஆயுள் முழுமையும் வீணாகக்கழித்துவிட்டு தாபத்திரயத்தால் துக்கத்தையடைந்து கடைசியில் வருத்தப்படுகிறான். அந்நிலைாவதென்ன? ஆதலால், ஓ! பாலகர்களே! நானென்றும் தன்னுடையதென்றும் அபிமானிக்கப்பட்டவிஷயங்களை வெகுதூரத்தில் விட்டொழித்து, ஆதிதேவனான ஸ்ரீமந் நாராயணனைச் சரணமடைய வேணும். அதுதான் மோக்ஷஹேதுவென்று விஷயப்பற்றற்ற பண்டிதமணிகளால் விரும்பப்படுகின்றது. பரமாத்துமாவைப் பிரீதியடையச்செய்வதில் பிரயாஸமொன்றுமில்லை. எல்லா

வற்றிலுமுள்ளவராவர். எல்லாஸ்வரூபமாயுமுள்ளவர். அதனால் நீங்கள் யாவரும் கொடியதான இவ்வஸுரத்தன்மையை யறவேயொழித்து, பகவான் பிரீதியடையும் வழியிற்செல்லுங்கள். பகவான் பிரஸன்னராய்விட்டால் கிடைக்கத்தகாதது யாதொன்றுமில்லை. இதுதான் யாவரும் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம். இந்த ஞானமார்க்கத்தை ஸ்ரீமந்நாராயணன் நாரதமஹரிஷிக்கு உபதேசித்தார். பாகவததர்மத்திற்கு உத்தமமான இந்தயோகத்தை அந்நாரதமஹாமுனி நான் கர்ப்பத்திலிருக்கும் பொழுது உபதேசித்தருளினர் என்று பிரஹ்லாதன், உபதேசிப்பதைக்கேட்ட அஸுரபாலகர்கள், ஸாரமாக இதனையே கிரஹித்துக்கொண்டார்கள். குருபதேசத்தைக் கிரகிக்கவேயில்லை. இதையறிந்த ஆசிரியர் பயந்து தன் குற்றத்தை விலக்கிக்கொள்ளும் பொருட்டுத் தெரிவிக்க, ஹிரண்யகசிபு மிகக்கோபங்கொண்டு, நீ சொல்லும் பகவானென்பவர் எங்கேயிருக்கிறாரென்று கேழ்க்க, "எங்குமிருக்குறாரெ"ன்று, பிரஹ்லாதனுரைக்க, அப்படியானால் இந்த ஸ்தம்பத்திலேன் காணப்படவில்லையென்று அதனைக்காலாலுதைத்தான் மஹாபாபி. அப்பொழுது பகவான், தனது பக்தமணியான பிரஹ்லாதன் சொன்னதை உண்மையாக்குவதற்கும், தானெங்கும் வியாபித்திருப்பதைக் காட்டுவதற்கும், மானிட உருவமும் ஸிம்ஹத்தினுருவமும் கலந்த நரசிம்மரூபியாய் அதே ஸ்தம்பத்தினிடமிருந்து ஆவிர்பவித்து, அட்டஹாஸம்செய்து, ஸந்தியாகாலத்தில் வாசற்படியில் தன்மடிமேல் அம்மஹாபாவியைப்போட்டு, நகங்களால்ப்பூரி, அவனுயிர் வெளிப்படச்செய்து, இரத்தவெறியாலும் கோபாவேசத்தாலும் ஒருவரும் கிட்டப்போகமுடியாமல் பிரம்மாதிகள் லக்ஷ்மீதேவியைப்பிரார்த்திக்க அவளும் கிட்டப்போகநடுங்கவே எல்லோரும் பிரஹ்லாதனையே வேண்டிக்கொள்ளும்போது, பிரஹ்லாதன் அருகிற்சென்று அடிபணிந்து அஞ்சலிபந்தம்செய்து நிற்கையில், பகவான் சாந்தமானார். அப்பொழுது பிரஹ்லாதன் ஸ்துதிக்க, பகவான் பிரஹ்லாதனுக்கு வரங்கொடுத்தருளினார். தேவர்களும் ஸ்துதிசெய்து பகவத்பிரஸாதம் பெற்றார்கள். பகவானே இல்லை, இருந்தாலும் அவர் பெரியவரில்லையென்பதாதி பகவத்துவேஷம ஹிரண்யகசிபுவுக்கு இருந்ததுபோல் யாவருக்குமிருக்கமாட்டாது. அதனால் அவன் பகவத்பக்தர்களைப்பிடித்தது போல் எவனாலும் பிடிக்கமுடியாது. அப்பேர்ப்பட்டவனும் அந்த

அபாரதத்தால் பகவானது கோபத்திற்குப் பாத்திரமாகி இருந்தவிடந்தெரியாமல் போய்விட்டான். அப்படியிருக்கையில், தற்காலத்தில் சிலர் சுயநலத்தையே முக்கியமாகப்பாராட்டிச் சுயமரியாதை பெறவேண்டுமெனக்கருதி பகவத்பிரியர்களான பிராமணாதிகளையும் மற்றஜாதியாரான பக்தர்களையும் அனேகப்பிரகாரமாகப்பிடித்து வருகிறார்கள். அதன்பயன் ஹிரண்யகசிபுவுக்கு நேர்ந்ததுபோல் அவர்களுக்குக் கிடைக்குமென்பதற் கையமில்லை என்று இச்சரித்திரத்தின் உட்கருத்து. ஆகவே பாலிகாவிவாஹம் முதலியவைகளைப் பரமதர்மமாக ஆதரித்துவரும் பிராமணாதிகளின் மதாசாரத்திற்கு முற்றிலும் விரோதமான விவாஹவயது, சம்மதவயது, கர்ப்பாதானவயது, முதலியபலவழிகளில் ஸதாசாரத்தைக் கெடுக்கத்தலைப்பட்டவர்களை பகவான் தர்மஸேதுவாயுள்ளவர் கெவனிக்காமலிருக்கப்போகிறதில்லை என்றதை யாவரும் நம்பி பகவானது ஆக்ஞைப்படி நடந்து க்ஷேமத்தையடைவார்களாக.

சுபம் !

ப—ர்.

---

॥ श्रीगणेशाय नमः ॥

अधस्तान्मानुषाकारं पुरस्तात्कुञ्जराकृति ।
निरस्तदोषदुरितं पुरस्तादस्तु वस्तु नः ॥

பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

# சோழமன்னர்களின் சரித்திரம்.

## முகவுரை.

அன்பர்களே ! ஆரியர்களே !

வடநாட்டிலுதித்த வடமொழியையே கையாண்டுவந்த நாம் இப்பொழுது தென்னாட்டையே தன்னாடாகக் கொண்டும், தென்மொழியையே தன்மொழியாகக் கையாண்டும் வருகிறோம். வடநாட்டிலுதித்த ஆரியமன்னர்களின் சரித்திரங்களை நம் புராணங்கள் வாயிலாகப் பலமுறையும் கேட்டிருப்பினும், காலமுமிடமும் நோக்கின் நாமனைவரும் தென்னாட்டு மன்னர்களாகிய சேர,

சோழ, பாண்டியர் என்னும் மூவருடைய சரித்திரங்களையும்நன்கு ஆராய்ந்து, அவர்கள் அறநெறி சிறிதும் வழுவாது அரசுபுரிந்து வந்த மேன்மையையும், மததர்மத்தைப் பாதுகாப்பதில் அவர்களுக்கிருந்த ஊக்கத்தையும், அவர்கள் நாட்டின்கண்ணுள்ள மக்களெல்லாம் தங்கள் தங்களறத்தைத் திரிபின்றி நடத்தி வந்தமையையும், இப்பொழுது எடுத்துக் காட்டவேண்டுவதவசியமாகத் தோன்றுகிறது பண்டைக் காலத்துத் தென்னாட்டு மன்னர்களின் அரசாக்ஷியின் அருமை பெருமைகளையுண்ணுங்கால்உள்ளம் உருகும்.

இச்சரித்திரங்களை ஆராய்வது மனதிற்கு உற்சாகத்தையும் மதாபிமானத்தையும், ஊட்டுமென்பதற்கையமில்லை. ஆனதுபற்றி நான் சோழமன்னர்களின் சரித்திரத்தை பிருஹதீச்சுவரமான்மியமென்ற வடநூலினின்றும் மொழிபெயர்த்துக் கூறுகிறேன். இஃது தென்மொழி நூலாராய்ச்சியில் ஊக்கமுடையோருக்கும், தேசச்சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கும், மிக்க பயன்படுவதுடன், நம் நாட்டின் பண்டைக்காலத்திய நிலைமையையும், நம் முன்னோர்களின் பழக்கவழக்கங்களையும் எடுத்துக்காட்டுவதனால் யாவரையும் உள்ளங்களிக்கச் செய்யுமென்பது திண்ணம்.

## 1. அத்தியாயம்.

ஸூதர்:— முன்னொருகால் வள்ளிமலைச்சிகரத்தில் சுகமாய் வீற்றிருப்பவரும், எவ்வுலகுக்குந் தலைவரும், பெரும் தேவரும், ஆனந்தரூபியும், தன்னையண்டிய பக்தர்களுக்கபயமளிப்பவரும், நந்தி, பிருங்கி, மஹாகாளர், முருகன், கணபதி முதலியோரால் என்றும் தொழப்பட்டவரும், உமையுடன் கூடியவரும், சாமரம் வீசப்பெற்றவரும், நன்கு மலர்ந்த தாமரைபோன்ற முகத்தை உடையவருமான பரமசிவனை நோக்கிப் பார்வதி பின்வருமாறு கூறுவாளானாள்:—

பார்வதி:— உலகமெல்லாம் போற்றும் உயர்வுற்ற தேவாதி தேவனே ! உலகின் தோற்றம், நிலையழிவு இவைகளுக்குக் காரணமான பிரமன், திருமால், ஈசன், என்ற மூவ்வுருவுடன் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் உடையீரே ! சராசரன்னிறைந்த இவ்வுலகின்கண்ணெல்லாம் செய்யுமாற்றலுற்றவரே ! உம்மை யான் கேட்க்

கும் ஓர் வினவிற்குப் பதிலளிப்பீராக. இஃதென்னுள்ளத்தில் வெகு நாட்களாகக் குடிகொண்டிருத்தலால் இதற்கு மறுமொழி கூறவீராக.

ஈசன்:— ஏ அபர்ணே! உனக்கு மனக்களிப்பைத் தரத்தக்கவற்றை எல்லாம் கேள். நடந்தது, நடப்பது, நடக்கப்போவதாகிய எதை நீ கேட்பினும் தயங்காதுபதிலளிப்பேன். இவ்வாறு இறைவன் கூறியதைக் கேட்டுச் சந்தோஷமடைந்த பார்வதி மஹாதேவனினடிமலர்களிற் பணிந்து வணக்கத்துடன் கைகூப்பி நின்று உரைக்கத் தலைப்பட்டாள்.

## 2. அத்தியாயம்

பார்வதி:—ஏ தேவரே! சரணமடைந்தோரைக்காப்போரே! கிருத, திரேதா, துவாபர, கலியென்னும் நான்கு யுகங்களின் முடிவுகளிலும் அடிக்கடி பிரளயம் ஏற்பட்டு, ஸ்தாவர ஜங்கமங்களெல்லாம் கடுவெய்யோன், பெருங்காற்று, மஹாமேகங்கள் பெருமழை முதலியவற்றால் எரிந்தும், உலர்ந்தும், தண்ணீரில் மூழ்கியும் உலகமழிந்தக்கால், மறுபடியும் உம் ஆணையால் அண்டங்கள் தோன்றுகின்றன. பிருமன், திருமால், ஈசன் இவர்களைப் படைக்கிறீர். இப்பதினைந்து உலகங்களும், மலை, நதி, கடல், முதலியனவும், தேவர்கள், அசுரர்கள், திக்பாலகர்கள், இருடிகள் மனுக்கள் எல்லோரும் உம்மாலுண்டாக்கப்பட்டு உம்மாணைக் கடங்கி நடக்கின்றனர். படைத்தல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழில்களும், பிருமன், மால், ஈசன், இவர்களிடத்து உம்மால் ஒப்புவிக்கப்பட்டன. சூரியன், அக்கினி, காற்று, இந்திரன், இருடிகள், மனுக்கள், கிரஹங்கள், சேஷன், யானைகள், சிம்சுமாரம், விதலத்திலுள்ள ஆதி கூர்மம் முதலியவைகள் உன் ஆணைக்கடங்கி சராசரங்களைத் தரிக்கின்றன. பதினொன் தீவுகளில் ஜம்பூத்வீபமே மிக்கப் புண்ணியத்தை விளைக்கும்.

तत्र यद्भारतं वर्षमाहिमाचलसेतुमत् ।
पुण्यभूमिरियं श्रेष्ठा तस्मिन्नप्यस्तुपुण्यदा ॥

அத்தீவிலுள்ள ஒன்பது வர்ஷங்களுள் சேது முதலிய கல்பம் வரையிலுள்ள இப்பாரத வர்ஷமே மிக்கச் சிறந்த புண்ணிய பூமி. இதில் கங்கை, யமுனை, காணவியலாத ஸரஸ்வதி, நர்மதா, கபிலா

துங்கா, பயோஷ்ணீ, கோணு, கிருஷ்ணு, பீமா, கோதாவரீ, தாம்ரபர்ணீ முதலிய சிறந்த புண்ணிய நதிகள் ஓடுகின்றன. கேதாரம், பிரபாஸம், குருக்ஷேத்திரம், பிரயாகம், காலஞ்சரம், மஹாகாளம், புஷ்கரம், பதரீவனம், சித்திரகூடம், நைமிசம், கங்காத்வாரம், அமரேச்சுவரம், கோகர்ணம், திரியம்பகம், ஸ்ரீ சைலம், அருணுசலம், காளஹஸ்தி, விருத்தாஜலம், கோவர்த்தனம், சிதம்பரம், ஸன்பாத்ரி, மஹேந்திரம், சுக்திமான், நிஷதம், விந்தியம், ஹிமயமலே, அமராலயம், அயோத்தி, மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்தீ, துவாராவதீ முதலிய முக்தியைக் கொடுக்கவல்ல சிவஸ்தலங்கள் கீழ்ச் சொன்ன நதிக்கரைகளில் தேவரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டு விளங்குகின்றன. இப்புண்ணிய தீர்த்தங்களும், க்ஷேத்திரங்களும், ஒவ்வொரு யுகமுடிவிலும் நாசமடைகின்றன. அவ்வாறழிவுற்றவைகள் மறுபடியும் எவ்வாறு தோன்றுகின்றன?

இவ்வாறு மலேமகளால் வினவப்பட்ட ஈசன் வெகு நேரம் தியானம் செய்த பின்பு அவளே நோக்கிக் கூறலானர்.

## 3 அத்தியாயம்

ஈசன்:— எல்லாச் சந்தேஹங்களேயும் தீர்க்கவல்ல தோர் கேள்வி கேட்டாய். இக்கலியில் மானிடர்களுக்கு நம்பிக்கையுண்டாக்குமாறு சுருக்கமாய்க் கூறுகிறேன். கிருத, திரேதா, துவாபரமென்ற யுகங்களில் ஸோம, ஸூர்ய குலங்களில் உதித்தவர்களும், என் பக்தர்களுமான ஐம்பாத்தாறு தேசமன்னர்கள் கேதாரம், காஞ்சீ முதலிய நதிக்கரையிலுள்ள ஸ்தலங்களில் பிரளய காலத்தில் மண்ணுள் மறைந்து பிறகு தானுகத் தோன்றிய சிவஸ்தலங்களே மண்ணே நீக்கிச் சுத்தம் செய்து அவைகட்கு அழகிய பிரகாரங்கள், கோபுரங்கள், கர்ப்பக்ருகங்கள் முதலியவைகளுடன் ஆலயங்களேக் கட்டுவித்தனர். முருகன், கணபதி, தேவி இவர்களுக்கும் தனித்தனியே ஆலயங்கள் கட்டுவித்து புண்ய நக்ஷத்திரங்களில் உற்சவம் முதலியவைகளே நடத்திக்கொண்டு கங்கை முதல் சேதுவரையில் ஆண்டு வந்தனர்.

முக்கியமாகக் கலியுகாரம்பத்தில் அவைகளழிய ஆரம்பிக்கவே என்னுணையை முன்னிட்டு என்னுடைய கணங்களே உலகில் சிவதர்மத்தைப் பரவச் செய்யவும், இருப்பவைகளேப் பாதுகார்க்கவும், சிவ கைங்கர்யங்களே நடைபெறச் செய்யவும், உலகை

ஆளவும், நந்தன் வரையிலுள்ள க்ஷத்திரியர்களாக சிவபக்தர்களின் வம்சங்களில் உதித்தார்கள்.

பிறகு சூத்திரஸ்திரீகளிடம் பிராமணர்களுக்குப் பிறந்தவர்களான சேரன், விக்ரமபாண்டியன், சோழன், முதலியவர்கள் உலகையாண்டனர். சேரனென்னுமோர் அரசன் மேன்மை பெற்றுச் சேரவம்சத் தலைவனாக விளங்கினன். இக்கலியில் இவ்வரசன் குலத்திலுதித்த 22-அரசர்கள் பிரசித்திபெற்று வாழ்ந்தனர்.

शूद्रायां ब्राह्मणाज्जाताः उत्तमाद्भूतिकीर्तिताः ।
चेरविक्रमपाण्ड्याख्याः चोलाभूवन्महीतले ॥
चेरःपरन्तपनामासीत चेरवंशधुरंधरः ।
परंपरास्ते द्वाविंशद्राजानः प्रथिताः कलौ ॥

சிவபக்தர்களும், பெருமைவாய்ந்தவர்களும், விபூதி ருத்திராக்ஷமணிந்தவர்களும், சிவபக்தர்களை வழிபடுபவர்களும், சிவலிங்க பூஜகர்களும், சிவகைங்கரியத்தில் ஈடுபட்டவர்களும், பணமாப் பொருள் உய்யுந்தன்மையுடையவர்களுமான, அச்சேரமன்னர்கள் கங்கைக் கரையில் 64-கட்டங்களையும், விசுவநாதர் முதலிய 42-லிங்கங்களுக்கு ஆலயங்களையும், ஞானவாபீ முதலிய குளங்களின் படிக்கட்டுகளையும் நிர்மாணம் செய்தனர். சிவபக்தர்களான அவ்விருபத்திரண்டு மன்னர்களும் கலியிளாம்பத்தில் கேதாரம், பிரயாகம், ஒங்காரம், வைத்யநாதம், பிரபாஸம், புஷ்கரம், கோகர்ணம், திரியம்பகம், முதலிய ஆலயங்களைக் கிரமமாகக் கட்டுவித்தனர். தங்கள் தேசங்களில் அந்தணர்களுக்கு அக்கிரஹாரங்களையும், இரஸ்தாக்களில் தண்ணீர்ச்சாலைகளையும், அன்ன சத்திரங்களையும், ஏற்படுத்தினர்.

முஞ்ஜன், போஜன், விக்கிரமன் முதலியவர்கள் பிநாகினி (பண்ணை) நதியினிருகரைகளிலும், ஸ்ரீ சைலம், கோகரணம், காளஹஸ்தி, திரியம்பகம், அஹோபிலம், வேங்கடமென்ற ஆலயங்களையும் ஆங்காங்கு கிராமங்களுக்கருகே ஆறுகளுக்குப் படிக்கட்டுகளையும் கட்டுவித்தனர்.

मालयध्वजपूर्वास्ते पाण्डयाः पञ्चाशतान्नृपाः ॥

மலையத்வஜன் முதலிய 50-பாண்டிய வம்சத்தரசர்கள் தாம்ர பர்ணீ வேகவதீ (வைகை) என்னும் ஆறுகளின் இருகரைகளிலும் மதுரை, ஜனார்த்தனம், சுசீந்திரம், விருஷாசலம், பாபநாசம், தோ தாத்திரி, கன்யாகுமாரி முதலியவிடங்களில் சிறந்த ஆலயங்களை யும் உயர்ந்த அக்கிரகாரங்களையும், வழிப்போக்கர்களுக்கு அன்ன மளிக்கும் சத்திரங்களையும், தண்ணீர்ச் சாலைகளையும், நிர்மாணம் செய்தனர். பாண்டிய மன்னர்கள் கேரள மன்னர்களுடன் தங் கள் தங்கள் கிராம எல்லைகளை ஏற்படுத்திக்கொண்டு சாலைகள் தோறும் நிழல் தருமரங்களையும் பயிரிட்டனர்.

அப்பாண்டிய வம்சத்தில் நீ மீனாக்ஷியென்னும் பெயருடனு தித்தாய். நானங்கு சுந்தரேசனென்னும் லிங்கத்திற்றோன்றி உன் னுடன் வசிக்கிறேன். அவ்வம்சத்திலுதித்த மன்னர்களின் சிவ பக்தியை மெய்ப்பிக்கவே நானங்கறுபத்தினான்கு லீலைகளைச் செய்தேன். மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசு, என்பவர்களை என்பக்தர்களாக்கிக்கொண்டு அவர்களால் தென்மொழியில் என் ஸ்தலமான்மியங்களைப் பாடச் செய்து உலகமனைத்தும் பரிசுத்தமாக்கினேன்.

तेषां वंशप्रसूतानां भक्तिप्रख्यापनाय वै ।
चतुष्षष्टिमहालीलाः मयाकारि नगात्मजे ॥
माणिक्कवाचकं ज्ञानसंबन्धं सुन्दरं तथा ।
वाक्पतिञ्चैव मद्भक्तं कृत्वा द्राविडभाषया ॥
तत्तत्स्थानाख्यानगानैः पावयामि जगत्त्रयम् ॥

சேரன், சோழன், விக்கிரமன், பாண்டியன், கேரளனென்ற அரசர்களின் வம்சத்தில் உதித்தவர்கள் தக்ஷிண கோகர்ணம், உத்தரகோசம், வாதபூரி, இராமேசுவரம், சிதம்பரம், வேதாரண் யம், திருவாரூர், ஸ்ரீகண்டம், திருவானைக்காவு, இரத்தினகிரி, திருச்சிராப்பள்ளி இவ்விடங்களிலுள்ள ஆலயங்களை காவிரியினிரு கரைகளிலும் கட்டுவித்து அனேகம் சிவதர்மங்களையும் செய்தனர். இவ்வம்சத்திலரிய பெரிய அறுபது சிவபக்தர்கள் தோன்றினர்,

இனிச் சோழமன்னர்களின் சரித்திரங் கூறுகிறேன், கவனத்துடன் கேழ்பாயாக. (தொடரும்)

பண்டிட், N. வைத்திநாதசாஸ்திரி,
ஸரஸ்வதிமஹால், தஞ்சை.

## ஒருவன் எப்பொழுது ஆத்மாவை அறிந்தவனாகிறான்?

ஒருவன் எப்பொழுது ஆத்மாவை அறிந்தவனாக ஆகிறான்? ஆத்மாவை அறியவேண்டுமானால் முதலில் எவ்விஷயத்திலும் அறிகிறவனும் அறியப்படும் வஸ்துவும் வேறுஎன்று விசாரித்தறியவேண்டியது அவசியமாகிறது. அவை இரண்டும் ஒன்றாயிக்க எவ்விதத்தாலும் இயலாது. அதனால், "நான் பசுவைப் பார்க்கிறேன், நான் தேகத்தைப்பார்க்கிறேன்" என்றவிடத்தில் பார்க்கப்படும் வஸ்துக்கள் பேதமானாலும் பார்க்கிறவன் ஒருவனே, பசுவைப்பார்க்கிறவனே தேகத்தையும் பார்க்கிறான். ஆனால் பசுவைப் பார்க்கிறவன் பசுவன்று. அங்ஙனமே தேகத்தைப் பார்க்கிறவன் தேகமன்று. இதனால் பார்க்கிறவன் ஜீவன். "ஜீவாத்மாவோவென்னில் கண்ணில் கண்ணினால் ரூபத்தைப்பார்க்கின்றவனைக்-கர்காண்டு கண்ணில் ஸன்னிஹிதனாகிறான்" (சூ—பா.)

இவ்விதத்தால் அறிகிறவன் ஜீவனாகிறான். "அவனுக்கு வேதித்ருத்வம் காணப்படுவதே அதன் காரணமாகும்." (சூ-பா) அதனால் எந்த ஜீவனுக்குமாயை, பசுவைப்போல், அறியப்படும் வஸ்துவாகிறதோ, அந்தஜீவன் ஆத்மாவுடன் ஒன்றாகிறான். "சாரீரன் ஆத்மாவாகவாகலாம்." (சூ-பா.) - இதனால் வெளியாகும் உண்மையானது ஆத்மாவை அறிவது என்றால் மாயையை அறிவதே. ஏனெனில், மாயையை அறிகிறஆத்மா அதற்கந்யனாகிறான். அதனால் ஒருவனுக்கு மாயை எப்பொழுது அறியப்படும் வஸ்துவாகிறதோ, "ப்ரதானத்துக்கு க்ஷேத்ரபத்வம் கூறும் வசனம் காணப்படுகிறதன்றோ." (சூ-பா.) அப்பொழுது அவன் ஆத்மாவை அறிந்தவனாக ஆகிறான்.

"குணேப்பச்ச பரம்வேத்தி." (கீதை, 14—19.)

R. சுப்பிரமணியஅய்யர்.

# ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

(350-வது பக்கத்தொடர்ச்சி.)

## 43. குருவின் விருத்தாந்தம்.

நமது தீக்ஷிதாளுடைய ஸாஹித்திய வித்யாகுருவுக்கு, குரு ராமகவி என்று பிரஸித்தமான பெயர். அவரால் இயற்றப்பட்ட நூல்கள் Goverment Oriental Manscript (இல்) இருக்கின்றன.

ஒரு சமயம் தாத்தாசாரியாருடைய ஸம்வாதம் நேர்ந்தபோது அவரை நோக்கிக் கூறப்பட்ட குருராமகவியின் பிரத்யுத்தர சுலோகத்தை எழுதுகிறேன்.

केचित्त्वां गरुडाधिरूढमपरे क्षीरोदशय्याशयं
भास्वद्बिम्बगतं परे परशिवं चैके चितं मन्वते ।
चेतो मे धृतिमेति मेघसुषमे वामेक्षणामेखला-
लीलापाङ्गतरङ्गरङ्गनटितानङ्गे तवाङ्गे परम् ॥

ஸ்ரீ காந்தனே! உம்மைச் சிலர் கருடவாஹனரூடராயும், மற்றுஞ் சிலர் திருப்பாற்கடலில் பள்ளிகொண்டவராயும், மற்றவர் சூரிய மண்டலத்தில் பிரகாசிப்பவராயும், சிலர் பரமசிவனாயும், சிலர் சுத்த சைதன்யமாயும் எண்ணுகின்றனர். எனது மனமோவெனில், கார்மேகம்போல் மேனியுள்ளதும், கண்ணழகிகளின் ஒட்டியாணப்பக்கத்தில் சலிக்கின்ற கடைக்கண்களின் அலைகளாகிற நர்த்தனசாலையில் நடிக்கப்பட்ட அநங்களையுடையதுமான உமது திருமேனியில் மிகவும் சந்தோஷத்தையடைகிறது.

இந்தச் செய்யுளைக் கேட்டதும், தாத்தாசாரியாருக்கு குருராமகவிக்கு விஷ்ணுவினிடம் உள்ள அந்தரங்க பக்தி புலப்பட்டது.

## 44. ஸாஹித்திய குருவினிடம் தீக்ஷிதாளின் பக்தி.

ஒரு சமயம் தீக்ஷிதாள் பல்லக்கிலேறி, சிஷ்யாள் சூழ, பிருதுகளோடு கிராமம் செல்லும்போது, குருராமகவி நடுவழியில்

சந்தித்து அவர்களிடம் சொல்லிக்கொண்ட சுலோகங்களை எழுது கிறேன்.

श्रीमन्नप्पय्ययज्वन्नपि कुशलमुमाकान्तपादाब्जसेविन्
साक्षाच्छ्रीमत्कटाक्षैः बुधवर कुशली श्रीमतामस्मि शिष्यः ।
एते के पाल्लिकायाः परिसरसरणौ ब्राह्मणाः सञ्चरन्ति
श्रीमद्भाष्यप्रणेतुः मतमनुसरतां शिष्यशिष्या इमे वः ॥
दृष्टस्तातार्यनामा मधुरिपुमतजुट् ब्रह्मणामग्रयायी
युष्मद्दिव्याङ्घ्रिपद्मस्मरणधूतधिया अग्रदर्पः स जज्ञे ।
कुत्रासौ चोळसिंहप्रवरपुरमगात् द्रष्टुकामो नृसिंहं
देयाऽऽज्ञा............स्वपदाजिगमिषोर्देशिकेन्द्र त्वयाऽद्य ॥

ஸ்ரீமானான அப்பய்ய தீக்ஷிதரே! பார்வதிகாந்தனின் சரணகமலத்தை சேவிப்பவரே! குசலமா? வித்வான்களில் சிறந்தவரே! ஸ்ரீமான்களான தங்களது சிஷ்யனான நான் நேரான ஸ்ரீமான்களின் கடாக்ஷங்களால் குசலமுள்ளவனாக இருக்கிறேன். பல்லக்கின் பக்கத்து வழியில் சஞ்சரிக்கின்ற இந்தப் பிராம்மணர்கள் யாவர்? ஸ்ரீமத்தான பாஷ்யத்தைச் செய்த ஆச்சார்யாளின் மதத்தைப் பின் தொடர்ந்த தங்களுடைய சிஷ்யர்களின் சிஷ்யர்கள். இந்த முதலாவது சுலோகத்தால், தன்னுடைய சிஷ்யர்கள் என்று சொல்லிக்கொள்ளாமல் தமது குருவின் சிஷ்யாளின் சிஷ்யர்கள் என்று உரைத்தது குருவிற்கே பெருமையைப்புகட்டுகின்றது.

கேள்வி:— வைஷ்ணவமதத்தையவலம்பித்தவரும், பிராமண சிரேஷ்டருமான தாதாச்சாரியார் என்பவர் காணப்பட்டாரா?

பதில்:— தங்களுடைய பரிசுத்தமான சரணகமலங்களின் ஸ்மரணத்தால் ஏற்பட்ட புத்தியையுடைய என்னால் அவர் மதமில்லாதவரானார்.

கேள்வி:— இப்போது அவர் எங்கே?

பதில்:— நாஸிம்மரைப் பார்க்க விருப்பங்கொண்டு சோளஸிம்மபுரம்சென்றார். குருராஜனே! இப்போது தனதிருப்பிடஞ்செல்ல விரும்பும் எனக்குத் தங்களால் அனுமதிகொடுக்கத் தகுந்தது

என்று அனுமதிபெற்று தீக்ஷிதாள் சென்றார். என்ற இந்த சுலோகங்கள் அடையப்பலகிராமத்து விருத்தர்களின் வாயிலாகத் தெரிந்தவை.

## 45. பத்தினியின் உத்தரம்.

நமது தீக்ஷிதாள் செய்யும் ஒவ்வொரு யாகத்திலும், சாஸ்திரார்த்தத்தை நன்குணர்ந்த பத்தினியான ஆச்சாளு அம்மாள், அனுகூலமாகவே இருந்து, கன்மாக்களை நடத்தினாள். அவளுக்குப் பதியினிடமுள்ள பக்தியாலேயே, ஸகலசாஸ்திரார்த்தங்களும் நன்கு விளங்கும், முன்னொரு சமயம், யாகம் செய்யுந்தருணத்தில், யாகசாலையில் யஜமானான தீக்ஷிதாள், பத்தினியான அவ்வம்மணியை நோக்கி “कति ते जारा” உனக்கு எத்தனை கள்ளப்புருஷர்கள் என்றார். உடனே அவ்வம்மாள் त्रयो मेजारा: எனக்கு மூன்று கள்ளபுருஷர்கள். என்றாள் அப்போது அந்த யாகசாலையில் விளங்காநின்ற வித்வான்கள் ‘ இது என்ன ஆச்சர்யம்; இப்பதிவிரதையே இவ்வாறு சொல்லுகிறாளே ” என்று பிரமித்தனர். உடனே அப்பெண்மணி சுருதி ஸ்மிருதிகளை அறிவித்தாள்.

सोमः प्रथमो विविदे गन्धर्वो विविद उत्तरः ।
तृतीयो अग्निष्टेपतिस्तुरीयस्ते मनुष्यजाः ॥

ऋ० मं० १० सू० ८५ मं० ४० ।

स्त्रियः पूर्वं सुरैर्भुक्ताः सोमगन्धर्ववह्निभिः ।
भुञ्जते मानुषाः पश्चात् तस्माद्दोषो न विद्यते ॥
सोमस्तासां ददौ शौचं गन्धर्वः शिक्षितां गिरम् ।
पावकः सर्वमेध्यत्वं तस्मान्निष्कल्मषाः स्त्रियः ॥

அல்லாவது, கிரமமாய், ஸோமன், கந்தர்வன், அக்கினி இவர்களும் நான்காவதாக மனுஷ்யனும் ஸ்திரீக்கு புருஷர்களாகிறார்கள். ஸோம கந்தர்வ அக்கினிகள் பதிகள் என்பதற்கு, போஷகர்கள் என்று கருத்து. நான்காவதான மனுஷ்யனே போக்தாவாகிறான்

ஸோமன் பெண்களுக்கு சௌசத்தையும், கந்தர்வன் சிக்ஷிதமான வாக்கையும், அக்கினி ஸகலவிதமான சுத்தியையும், அனுக்

கிரஹிக்கிறார்கள். ஆகையால் ஸ்திரீகள் தோஷமற்றவர்கள் இவ்வாறு அப்பதிவிரதாமணி வெளியிட்டதைச் செவியுற்ற படிப்பாளிகள் யாவரும் வியந்தார்கள். விதுஷியான இந்த மனைவியைப் பெற்று, யாகங்களைக் குறைவற நடத்தும் பாக்கியம் வாய்ந்த தீக்ஷிதாளின் மஹிமையை எடுத்துரைக்க, ஆதிசேடனே திறமை வாய்ந்தவன். அஷ்டமூர்த்தியின் ஒரு மூர்த்தியான யஜமானன் என்ற, யாகம் செய்கிறவர் யாவருமே போற்றத்தக்கவர். அஷ்டமூர்த்தியான சிவபெருமானே தீக்ஷிதாளாய் அவதரித்து, யாகங்களை அனுஷ்டித்துப் பிறரையும் நடத்தச்செய்வதால், நம்போன்றவர்கள் அற்ப அறிவால் எங்ஙனம் எடுத்துரைக்க சாத்தியமாகும்.

K. V. சுப்பிரமணியசாஸ்திரி

---

# கற்பின் மஹிமை.

(வேதவதியின் சரித்திரம்)

முன்னொருகாலத்தில் இமவனமென்னும் பெயர் பொருந்திய ஆரண்யத்தில் வன்னமயிலாடவும், கிள்ளைகள் கொஞ்சவும் குரங்கினங்கள் மாத்துக்கு மரம் தாவவும் குயில்கள் இனிமையாய் கூவவும் அன்னங்கள் தாமரை தடாகங்களில் உல்லாசமாய் காலங்கழிக்கவும், ஜாதி, ஜம்பகை, மல்லி, முல்லை, பாரிஜாதம் முதலிய புஷ்பங்களின் நறுமணம் வீசாநின்ற அடி வனத்தில் ஓர் தண்டலையின் கண் காமம் முதல் ஆறையும் அகற்றி அக்னி வளர்த்தி அதன் மத்தியில் மஹாதவமியற்றிவாநின்ற சுவர்ணம் போன்றமேனியும், நீண்ட அளகபாரமும், சந்திரன் பிறை போன்ற நெற்றியும், அனங்கன் வில்போன்ற புருவமும், நீலோத்பலம் போன்ற கண்களும், எள்ளுப்பூ போன்ற மூக்கும், கண்ணாடிபோன்ற கன்னங்களும், தாமரைமொட்டுப் போன்ற இரு குசங்களும் உடையவளாய் பார்ப்பவர்கள் மனதைத் தன்னிடம் தன்னுடைய சௌந்தர்யமென்னும் காந்த சக்தியால் இழுக்கும் வல்லமையுள்ளவளாய் ஒரு யுவ கன்னிகை தவம் புரிந்துகொண்டு வந்தாள். இது இப்படியிருக்க திரிலோகாதிபதியும், புலஸ்திய பிரஜாபதியின் வம்சத்தில் வந்தவனும், கைலாஸபர்வதத்தை பெயர்த்து எடுத்தவனும் பார்வதி பங்காளனை பரமேசுவரனு

டைய அனுக்ரஹத்தினால் அவர்கொடுத்த வாளாயுதமும் அரை கோடி ஆயிசும், இராவணன் என்னும் பெயர் பெற்ற தசக்ரீவனு னவன் திக்கு விஜயம் செய்து பல ராஜ ராஜாக்களையும் தேவர் களையும் ஜயித்து லங்கைக்குத் திரும்பிப்போகிற காலத்தில் இவன் பூர்வம் செய்த தீவினையின் பயனால் இக்காட்டின் மத்தியில் இவன் ஏறிவரும் புஷ்பவிமானம் வந்து சேர்ந்தது. உடனே இவ்வனத் தைப் பார்த்து அழகாயிருக்கக் கண்டு உள்ளே பிரவேசிக்க இச்சைகொண்டு பிரவேசித்து கன்னிகை தவம் செய்யும் இடத் தையடைந்து, மஹாரூபலாவண்யமுள்ள இந்த ஸ்திரீயைப்பார் த்து, பிரமித்து, கால் அசையமுடியாமல் ஸ்தம்பம்போல் நின்று இத்தகை வாய்ந்த அழகி ஏது இவ்விடம் தவம்செய்யக் காரணம். இவள் யாராயிருக்கலாம்?! தேவஸ்திரீயோ ! அப்சரஸ்திரீயோ ! நாககன்னிகையோ! பூலோகத்தில் வசிக்கும் ராஜகன்னிகையோ யாரோ தெரியவில்லை. எப்படியும் விஷயத்தையறிந்து இவளு க்கு மணமாயிருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும்சரி, நம் விருப்பத் துக்கு இசைந்தாலும் இசையாவிட்டாலும் பலாத்காரமாக இவளை நம்முடையவளாகச் செய்துவிடவேண்டும் என்று நினைத்து கொ ஞ்சம் கிட்டி நெருங்கிப்போய் ஓ பெண் நாயகமே, நீயார் ? இவ் வனத்தில் தனித்து யௌவனத்தை வீணே கழித்து தவம் புரியும் நோக்கமென்ன ? உன் பெயர் என்ன ? நீ யாருடைய கன்னிகை இவையெல்லாம் விபரமாய்ச் சொல்லக் கடவாயென்று சிங்கம்போல் கர்ஜித்துக்கேட்டான்.

இவ்வித குரலைக் கேட்டவுடன் தவத்திலிருந்த கன்னிகையா னவள் கண்களை விழித்துப்பார்த்து ஓ ஓ என்ன காரியம் செய் தேன் ? மஹாரண்ணியத்தில் புருஷசஞ்சாரமிருக்காதென்று எண்ணியல்லவோ தவமியற்றத்துணிந்தேன்-இவன் யாரோதெரி யவில்லை-ஆனால் என்ன இவனுக்குத் தகுந்தபதில் இறுப்பேன். என்று மனதை தைரியப்படுத்திக்கொண்டு சொல்லுகிறாள். ஓ இராஜனே! அந்தணரில் சிரேஷ்டரான வீரகுசத்வமஹாமுனியின் புத்திரி. என் பெயர் வேதவதி. என் பிதா சதாகாலமும் சந்தியா வந்தனாதி நித்திய நைமித்திய கருமங்களில் வழுவாமல் சதா வேதபாராயணம் முதலிய செய்து வந்தவர். அவரால் ஓதப் பட்ட வேதசொரூபத்தில் நின்றும் நான் பிறந்தேன். அக்காரணத் தினால் எனக்கு வேதவதியென்று பெயரிட்டார். நானோ கன்னி

காஸ்திரீ. என்னை மணக்கவேண்டு மென்று அமரர்களும் அரக்கர்களும், அசுரர்களும், இதர ராஜாக்களும் வந்து என் பிதாவைக் கேட்டார்கள். எனக்கு அவர்களுடைய பேரில் இஷ்டமில்லாததினால் மறுத்து விட்டேன். அதினால் என் பிதாவிடம் கோபங்கொண்டு ஒரு அரக்கன் என் பிதாவை இரவில் கொன்று விட்டான். அதுமுதல் நான் இவ்வேடம் பூண்டு என் மனதில் வெகு நாளாக பதிந்திருக்கும் என் வடிவுக்கேற்ற புருஷனாகிய மஹாவிஷ்ணுவை மணக்க நினைத்து அவரைக் குறித்து தவமியற்றி வருகிறேன் என்று சொன்னாள்.

இதைக்கேட்ட தசக்ரீவன் ஓ பெண்ணே என்ன சொன்னாய். மாதர்களுக்கெல்லாம் சிகாமணியாயிருக்கிற உன் வாயில் அவ்விஷ்ணுவின் பெயர் ஏன் வரவேண்டும். கரும்பிருக்க வேம்பை விரும்புவார்களா ? கற்பகத்தை விடுத்து அற்பரை அடைவாருமுண்டோ ? எதில் அவ்விஷ்ணு சிறந்தவனென்று நினைத்தாய். அவனை மிருகமென்று அறியாயோ ? பேதையே மீனும், ஆமையாயும், பன்றியாயும், குள்ளனும், சிங்கமாயும், உள்ளவனையா நீ மணக்கப் போகிறாய் ? ஐஐயோ அவனையா மணக்கப்போகிறாய் ? உனக்குப் புத்தியில்லையா ? உன் அழகுக்கேற்ற புத்தியை பிரமன் சிருஷ்டிக்கவில்லை போலும். பேதையே அந்த எண்ணத்தை விட்டுவிடு. நானே திருலோகாதிபதி. பிரமாவின் பேரன். என் பெயரோ பத்து தலையன். உலகெல்லாம் என் பெயரைக் கேட்டால் நடுநடுங்குவார்கள். மஹாகோரஸ்வரூபமும் கிருத்யமுடையவன். என்னைப்போலொத்த புருஷன் இந்த அண்டபுவனத்தில் கிடைப்பது அரிது. இனி ஒருவரும் என்னைப் போல் சிருஷ்டிக்கப்படவுமாட்டார்கள். ஆகையால் மஹாவிஷ்ணுவை மறந்து என்னை மணந்து இலங்கைக்கு வந்து எனக்கு சுகத்தைக்கொடுத்து என்னை கண்யம் செய்விப்பாய். பெண்புத்தியால் கெட்டுப்போகாதே. என்னை மணந்தால் தேவதாசிகள் உனக்கு ஊழியம் செய்வார்கள். அவனை மணந்தால் நீ தான் அவனுக்கு ஊழியம் செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் யோசித்துச்சொல் என்றான்.

(தொடரும்) கற்பகம்.

---